1996 மார்ச் 1]

தேவையில்லை இதை தீவிரப்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *167,* டாக்டர் சு. மணிமேகலை, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

167—

வட்டாரப் போக்குவரத்துக் கிளை அலுவலகம் அமைத்தல்

**34214—டாக்டர் சு. மணிமேகலை:*

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டத்தில் வட்டாரப் போக்குவரத்துக் கிளை அலுவலகம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): அரசு நிலை ஆணை எண் *689*, உள்துறை, நாள் *22-6-1994*-ல் ஸ்ரீரங்கத்தில் பகுதி அலுவலகம் திறக்க ஆணையிடப்பட்டுள்ளது. இப்பகுதி அலுவலகத்தில் ஸ்ரீரங்கம் வட்டம், லால்குடி வட்டம், துறையூர் வட்டம் ஆகியன அடங்கியுள்ளன. இந்த பகுதி அலுவலகம் லால்குடியிலிருந்து *11* கி.மி. தூரத்தில் தான் இருக்கிறது. எனவே லால்குடி வட்டத்தில் வட்டாரப் போக்குவரத்து பகுதி அலுவலகம் தொடங்க தேவை இல்லை.

டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியைத் தொடுத்த நேரத்தில் ஸ்ரீரங்கத்தில் ஆர்.டி.ஓ. ஆபிஸ் அமைக்கப்படவில்லை. அதற்குப் பிறகு மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் நமது போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கருணை உள்ளம் கொண்டு ஸ்ரீரங்கத்தில் ஒரு வட்டாரப் போக்குவரத்துக் கிளை அலுவலகம் அமைத்துள்ளார்கள். அதற்காக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் கூறிக்கொள்கிறேன். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாதது போல அது

ஆகிவிட்டது. லால்குடிக்கு அருகில் காட்டூர் கோத்தாரி சுகர்ஸ் ஆலையும், டால்மியா சிமெண்ட் ஆலையும் உள்ளது. அதிக கார்கள், வேன்கள், மினி வேன்கள், லாரிகள் உள்ளன. அவர்கள் எப்.சி எடுக்க வேண்டுமானால், ஸ்ரீரங்கத்திற்குத்தான் செல்லவேண்டியுள்ளது. திருச்சிக்குச் சென்றாலும் தூரம்தான், ஸ்ரீரங்கத்திற்குச் சென்றாலும் தூரம்தான். இரண்டும் ஒரே தூரம்தான். ஆகவே அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்து, அந்த வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கிளையை லால்குடிக்கு மாற்றி அமைத்துத் தர ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10.40*

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, நிறைய வாகனங்கள் இருப்பதாகச் சொன்னார்கள். போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகள் அங்கே இல்லை. தனியார் வாகனங்களும் பேருந்துகளும் அங்கே இல்லை. சரக்கு வாகனங்கள் *320*-ம், சிறிய பேருந்துகள் *55*-ம் மேக்சி கேப் வண்டிகள் *25*-ம், வாடகைக் கார் *1*-ம், அங்கே இருக்கின்றன. ஆட்டோ அங்கே இல்லை. டிராக்டர் டிரைலரோடு கூடியது *275* இருக்கின்றன. மொப்பட் *650* உள்ளன. ஸ்கூட்டர்கள் *51* இருக்கின்றன. மோட்டார் சைக்கிள்கள் *100*-ம், கார்கள், *45*-ம் அங்கே இருக்கின்றன. வெறும் டிராக்டர்கள் மட்டும் *120* உள்ளன. ஆகவே, குறைந்த வாகனங்கள் இருக்கின்ற காரணத்தால்தான் நான் இதைச் சொன்னேன். திருச்சி வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் *25* கிலோ மீட்டர் தூரத்திலும், ஸ்ரீரங்கம் அலுவலகம் *11* கிலோமீட்டர் தூரத்திலும் இருக்கிற காரணத்தால்தான், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைபோல, பக்கத்திலே இருக்கிற பல்வேறு தொழிற்சாலைகளுக்கு வாகனங்கள் எண்ணிக்கை அதிகமாக வருமேயானால் மீண்டும் அதை அரசு பரிசீலிக்கும்.

டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்போதும் இல்லை என்று சொல்லாமல் முடித்துத் தருகிறேன் என்று சொல்லக்கூடிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இப்போது இல்லை என்று சொல்கிறார்கள். உள்ளபடியே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய கார்களின் எண்ணிக்கை, வேன்களின் எண்ணிக்கை போன்றவை கடந்த ஆண்டு இருந்த எண்ணிக்கையாகும். ஆனால் இந்த ஓராண்டில் கார்களின் எண்ணிக்கையும், மற்ற வாகனங்களின் எண்ணிக்கையும் அதிக அளவில் கூடிவிட்டன. லாரிகளின் எண்ணிக்கையும் அதிகமாக இருக்கிறது. அடுத்ததாக, ஸ்ரீரங்கத்தில் அமைந்துள்ள ஆர்.டி.ஓ. அலுவலகம்,

1996 மார்ச் 1]

திருச்சி-சென்னை மெயின் ரோட்டில் இருப்பதால் நெருக்கடியும் அதிகமாக உள்ளது. ஆகவே இந்த அலுவலகத்தை லால்குடியில் அமைத்தால், எப்.சி.எடுக்க வருகிறவர்கள் சாவகாசமாக தங்கள் வாகனங்களை நிறுத்தி, தங்கள் வேலைகளை முடிக்க வசதியாக இருக்கும். அவர்களுடைய சிரமத்தைக் குறைக்கும் வகையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் துறைக்கு ஒரு ஆணையை இட்டிருக்கிறார்கள். 10 ஆயிரம் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டால், உடனடியாக பகுதி அலுவலகம் அங்கே வைக்கலாம் என்று ஆணை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இதையெல்லாம் பார்க்கிறபோது, அங்கே 4,500 வாகனங்கள்தான் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினரின் உணர்வுகளை மனதில் கொண்டு, இந்த ஆண்டு கூடுதலாக வாகனங்கள் பதிவு செய்யப்படுமேயானால், உடனடியாக அரசு அதைப் பரிசீலித்து, முடிவு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 168, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

168—

அமெரிக்க கம்பெனிகளின் கூட்டமைப்பு ஒப்பந்தம்

**23406—திருமதி கே. மரியம் உல் ஆசியா:*

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூரில் 1000 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் திட்டத்திற்காக அமெரிக்க கம்பெனிகளின் கூட்டமைப்பு ஒப்பந்தம் செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,